## 29.19 மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் பெற்று வழங்கும் அதிகாரிகளாக வட்டார வளர்ச்சி அலுவலர்களை நியமித்து அதிகாரம் வழங்கப்பட்ட ஆணையை மீட்டளிப்பு செய்தல்

---

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.45 நாள் : 09.03.1999

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.277, நாள் 10.9.1997
2. ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.30 நாள் 09.02.1999

**ஆணை**

ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.277, நாள் 10.09,1997–ல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு மதிப்பூதியம் பெற்று வழங்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட ஆணை, ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.30, நாள் 09.02.1999–ல் கிராம ஊராட்சித் தலைவர்கள் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் நலப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மதிப்பூதியத்தை வழங்கலாம் என்று மாற்றப்பட்டது., இந்த நடைமுறையை அரசு கவனமாக ஆராய்ந்து, மீண்டும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களே அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்களுக்கு மதிப்பூதியம் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்ட ஆணையை மீட்டளிப்பு செய்து ஆணையிடுகிறது.

2. கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் வெளியிடப்படுகிறது.

(அ). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.277, நாள் 10.09.1997–ல் பத்தி மூன்றில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப்பணியாளர்களுக்கு மதிப்பூதியம் பெற்று வழங்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஆணை மீட்டளிப்பு செய்யப்படுகிறது.

(ஆ). ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.30, நாள் 09.02.1999–க்கு திருத்தங்கள்

(i) பத்தி ஐந்தில் வரிசை எண்.1, நீக்கப்படுகிறது.

(ii) பத்தி ஐந்தில் வரிசை எண்கள். 2,3,4,5,6 முறையே 1,2,3,4,5 அன்று மாற்றப்படுகின்றன.

(iii) பத்தி ஐந்தில் மாற்றப்பட்ட வரிசை எண்.5–ல் ‘‘கிராம ஊராட்சித் தலைவர்கள் மக்கள் நலப் பணியாளர்களுக்கு மதிப்பூதியத்தை மாத அடிப்படையில் வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது’’ என்று உள்ளது நீக்கப்பட்டு இதற்குப் பதிலாக ‘‘5 கிராம ஊராட்சி தலைவர்களின் கட்டுப்பாட்டில் மக்கள் நலப்பணியாளர்கள் பணிபுரிவார்கள்.’’ என்பது சேர்க்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரேமஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்